**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2024 | வா.சா. | : 2 |
| பெயர் | : பாண்டியன் | த/பெ. | : சுந்தரராஜ் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : ஏரக்காபட்டி |
| தேதி | : 04.07.2026 | வயது | : 64/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி இராமன் எனது ஊரை சேர்ந்தவர் என்றாலும், நீண்ட கால நண்பர் என்றாலும், நன்கு பழக்கம் என்றாலும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இராமன் கேட்டுக் கொண்டதால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு 1ம் பிரதிவாதி ராமன் விபரம் சொன்னார் என்றாலும், அதை வைத்து வழக்கறிஞர் தயார் செய்தார் என்றாலும் சரிதான். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும், இடத்தை விற்றதில் அந்த இடத்தில் தனக்கு பங்கு உள்ளதாக வழக்கு போட்டுள்ளார். எத்தனை சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3) நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. 19.05.1997ம் தேதியன்று 3ம் பிரதிவாதியானவர் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் மகன் குமார் ஆகியோரிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 1997ம் வருட கிரையம் முதல் தற்போது வரை வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதி முத்தையா வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 01.09.2023ம்

தேதி வாதி தனது பாகத்தை பிரித்து தர கேட்கும்போது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி ராமன் என்பவருடன் உடன் பிறந்தவர்கள் நல்லியப்பன், லக்கன், நல்லியம்மாள் என்றால் சரிதான்.

4) நல்லியம்மாள் என்பவர் 1ம் பிரதிவாதி ராமன் மற்றும் அவரது சகோதரர்கள் மீது நத்தம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.39/2015 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கானது பாகப் பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வாதி வழக்கறிஞர் திரு.சுப.இளவரசு என்பவர் மூலம் 3ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியாது. வாதிக்கு திருமணமாகி 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். நானும், வாதியும், 1ம் பிரதிவாதி ராமனுடன் சேர்ந்து மூன்றாம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்கவே வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தெரிந்தே 1997 ஆம் வருடம் 1,2 பிரதிவாதிகள் மற்றும் குமார் ஆகியோர் 3ம் பிரதிவாதி முத்தையாவிற்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும், அதை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதி ராமனும் நெருங்கிய நண்பர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது மகளுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.07.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM., Date: 2026.07.04 13:13:00 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.